செ.வெ.எண்:43/2013 **பத்திரிக்கை செய்தி** நாள்:29.10.2013

பொதுமக்கள் அளிக்கும் பட்டா மாற்றம் தொடர்பான மனுக்களின் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு தீர்வு காணவும், பொது மக்களின் வீண் அலைச்சலை தவிர்க்கும் பொருட்டும் அரசு ஆணை எண்:210 வருவாய் துறை, நாள் 08.07.2011ன்படி விரைவு பட்டா மாற்றம் திட்டம் தமிழக அரசால் நடைமுறைபடுத்தப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது இத்திட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் வட்டங்கள் தோறும் சிறப்பு முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி கீழ்குறிப்பிட்ட வட்டங்கள் அதனெதிரே குறிப்பிட்ட தேதிகளில் விரைவு பட்டா மாற்ற சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

சிறப்பு முகாம் நடைபெறும் தேதி	வட்டத்தின் பெயர்
31.10.2013	பந்தலூர்
21.11.2013	குன்னூர்
12.12.2013	குந்தா

இச்சிறப்பு முகாம்கள் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் குறிப்பிட்ட தேதிகளில் நடைபெறும், முகாம் நடைபெறும் நாளன்று சம்மந்தப்பட்ட தாலுகாவின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் பட்டா மாற்றம் செய்திட விருப்பம் உள்ளவர்கள் சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்களுடன் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையில் நடைபெறும் முகாமில் பட்டா மாற்ற மனுக்களை அளித்து பயன்பெறுமாறு கேட்டுக்கெள்ளப்படுகிறது.

முகாமில் பெறப்படும் பட்டா மாற்ற மனுக்களில், முழு புல பட்டா மாற்று மனுக்கள் மீதான ஆணையை மனு அளித்த 15வது நாளிலும், உட்பிரிவு பட்டா மாற்ற மனுக்கள் மீதான ஆணையை 30வது நாளிலும் தாலுகா அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஓம்/-பொ.சங்கர், இஆப.,

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

/உ.ந.உ.ப/

29.10.13

மாவட்ட ஆட்சியருக்காக,
உதகமண்டலம்.